ஓலை 30 | ஓசை 121 | டிசம்பர் 2022

# அகர முதல இலக்கிய பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# வாழ்வியலும் வள்ளுவமும்



**உள்ள முடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும்.**

ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும், மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.

**Translation:**

The wealth of mind man owns a real worth imparts,
Material wealth man owns endures not, utterly departs.

**Explanation:**

The possession of (energy of) mind is true property;
the possession of wealth passes away and abides not.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

**நிர்வாக குழு**

**கு.செல்வமுத்துக்குமரன்**

**சிவம் அறக்கட்டளை**

**ஆசிரியர்கள்**

**அ.வில்சன்**

**குமர.தர்மசீலன்**

**வடிவமைப்பு**

**அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,**
**மயிலாடுதுறை - 609001**

## அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa   www.அகரமுதல.com   aagaramuthala@gmail.com



அகர முதல
உரக்கச் சொல்வோம்
01
சனவரி
2023
2023
HAPPY NEW YEAR
இனிய ஆங்கில புத்தாண்டு
நல்வாழ்த்துகள்
Aagaramuthalaa
01/01/2023
www.அகரமுதல.com

# புத்தாண்டே வருக! புன்னகை தருக!

நித்தமும் ஒளிரும் இளங்கதிராய்!
பூத்துக் குலுங்கும் புத்தம் புது மலராய்!

தத்தித் தவழும் புதுவெள்ளமாய்!
எங்கள் வாழ்வில் சக்தித் தரும்
தித்திக்கும் தேன் மழையாய்!

புத்துணர்ச்சியை அள்ளித்தரும் பூச்செண்டே!
வாழ்க்கையை வளமாக்கிட
வருகைத் தரும் புத்தாண்டே! வருக!
நாளும் புன்னகையைத் தருக!
உமது வருகையால் எங்களின்,
சோதனைகள் வேதனைகள்
சாதனைகளாக மாறட்டும்!




விவசாயிகளின் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கட்டும்!
வறுமை ஏழ்மை மறைந்து விடியல் பிறக்கட்டும்!
இளைய தலைமுறையினர்
ஏக்கங்கள் எதிர்ப் பார்ப்புகள் நிறைவேறட்டும்!

உண்மைக்கும் நேர்மைக்கும்
உருவங்கள் கொடுக்கட்டும்!
பொய்ச் சிலையை தவிர்த்து
மெய்ச் சிலைகளை செதுக்கட்டும்!

வலைத்தளம் இணையத்தளம் சற்று நேரம் தவிர்த்து
புத்தகங்களோடு பேசட்டும்!
மது மாதுவை விட்டு அறிவோடும் அறிவியலோடும்
நேரத்தை செலவிடட்டும்!

சாதி மத இன வேறுபாடுகள் மறந்து
சமத்துவம் தழைக்கட்டும்!
சகோதரத்துவம் உருவாக்கட்டும்!

சரித்திரத்தில் சாதனைகள் சங்கமம் ஆகட்டும்!
போர்கள் இல்லா பார் உலகம் தழைக்கட்டும்

ஒளிமயமான எதிர்காலம்
இல்லத்திலும் உள்ளத்திலும் மலர வளர
ஒளியான இறைவனை நாளும் வணங்கட்டும்!

கவிஞர் அ.இராபர்ட் கென்னடி,கானூர்

# தீராக் கோபம் போராய் முடியும்

**பா வகை: கலித்துறை**

உள்ளம் கொல்லும் கோபமும் வேண்டாம் உணர்வுக்குள்
எள்ளாய் ஓர்நாள் சீறியே பொங்கும் இடைநின்றே
கள்ளம் கண்டே ஏற்றியே போற்றும் கடுங்கோபம்
உள்ளந் தன்னில் ஓங்கிடக் கூடும் வெறுப்பும்தான்

பாயும் அம்பாய் சொற்களும் தாக்கும் படைகொண்டே
காயம் தந்தே நெஞ்சினை கொய்யும் கசையாக
மேயும் வன்மை எண்ணமும் தோன்றும் மெதுவாக
நேயம் கொன்று வெல்வது யாது நெருப்பாக??



கண்ணீர் சிந்த வைத்திடும் கோபம் கறையாக
பண்பை மாற்றி பற்றினை போக்கும் பகட்டாக
கொண்ட கோபம் ஆக்கமும் இல்லை குறைதானே
புண்ணாய் புற்றாய் பூத்திடும் கோபம் தவிர்ப்போமே

அன்பால் மாற்ற எண்ணினால் வாழ்வும் அழகாகும்
இன்பம் கொண்டே இன்மனம் ஏற்கும் இயல்பாக
பொன்னாய் மின்னும் அன்பினை மட்டும் புவிதோறும்
கன்னல் போலே என்றுமே நாமும் கனிவோமே!

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# புத்தக அலமாரி

அனைத்து வீட்டிலும்
அவசியமான ஒன்று
அரிதாகிப் போனதின்று
வகைவகையாய் நிறங்களில்
எண்ணிலடங்கா துணிகள்
எண்ணிக்கையில் கூட
எஞ்சிடாத புத்தகங்கள்
எண்ணத்தை மாற்றிட
ஏற்றம் வரும் வாழ்வில்
வீட்டிற்கொரு மரத்தோடு
வேண்டும் புத்தக அலமாரியும்.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# தரிசனம்

பயணக்களைப்பு
கோவிலில்
சாமியை பார்க்கும்
முன்னமே
உறங்கிப்போன
குழந்தை.
சிரித்துக் கொண்டிருக்கிறது
உறக்கத்தில்.
குழந்தைக்கு மட்டும்
கனவில் சாமியின்
சிறப்புத்தரிசனம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# தன்னொடு கிளைத்தல்

விலங்குகள் வரையப் பழகிய மகள்
உணவைத் தேடுவதற்கென
வனத்தை வரையத் துவங்கியதும்
வானம் மேகத்தை
அனுப்பி வைக்கிறது.
மழையின் பசுமையில்
பேரழகென விளைந்து நிற்கும்
மகளின் ஓவியத்தில்
மனிதக் காலடிகளைக் கண்டதும்
ஓரமெங்கும் தானே
முளைக்கத் தொடங்கின
வேலிகள்.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# ஹைக்கூ கவிதைகள்

1.
தும்மல் வரக் காரணம்
நினைவுப் பரிசு
அவளா ?

2.
விழிகளுக்கு
மூளைக் கொடுக்கும் ஏமாற்றமா ?
கனவுகள் !

3.
முயற்சியின் நான்கெழுத்துக்குள்
வெற்றி என்னும்
மூன்றெழுத்து !

4.
வயிற்றில் இடமிருக்கேன
நீருண்டு மூழ்கிய
வாளி !

5.
காய்ந்த சறுகுகளை
நினைத்துக் கொண்டே
மடியும் இலைகள் !

6.
கண்ணீரின் காவியமா?
தண்ணிரின் ஓவியமே
காதல்



7.
ஆள் பாதி, ஆடைப் பாதி
ஏழைக்கு ஏன் கொடுக்க
மறந்தாய் ஆண்டவா பாதி !

8.
விழிகளுக்கு மறைத்து
இரவின் கவிதையை
வாசிக்கும் மனது.

9.
மென்மையென்று எதுமில்லை
நூல்கள் ஒன்றுப்பட்டு
கழுத்தை இறுக்கும் கயிறு.

10.
வாழ்க்கை பயணத்தில்
நம்மோடு சேர்த்து பாடுபடும்
ஊரும், பேரும், படிப்பும்

கவிஞர் இரா.மதிராஜ்,அலப்பட்சக் கவுண்டன் புதூர்

# சீட்டுக்கட்டு பின்னே!

சீட்டுக்கட்டை கையால்
தொட்டோருக்கு
சில்லறைக் கூட
மிஞ்சாது.

சூது புகுந்த வீடானது
நன்கு விளைந்த நிலத்தில்
யானை புகுந்தது
போல வீணே.



உடல் நோகாது செல்வத்தை
ஈட்ட சீட்டுக்கட்டில்
வைக்கும் முதலீடு
உன்னை நம்பி வந்த
தாரத்தின் கண்ணீரும்
தந்தையே சகலமும் என நம்பிய
உனது செல்வங்களின் நிலை
வறுமை கோட்டினில்.

சீட்டுக்கட்டும் ஒரு
போதையே.
ஒருமுறை தொட்டுவிட்டால்
போதையானது.
உனக்கும் மட்டுமின்றி
உன்னை சார்ந்திருப்போருக்கும்
மரணத்தைவிட கொடிய
அவலநிலை மட்டுமே
மிஞ்சும்.

உன் வாழ்க்கையில் உயர
உன் உழைப்பினை நம்பினால்
சிறுக வாழ்ந்தாலும்
சிறப்போடு வாழலாம்.

உன்னை நாம்பாது
சீட்டுக்கட்டை நம்பினால்
கனவு கோட்டையாக
அனைத்தும் தகர்ந்துவிடும்.

கவிஞர் கி இளமதி,நெய்வேலி டவுன்ஷிப்

# ப(ரு)சித்த மாடு

வறண்ட பூமியும் சுவாசித்திட
பழமாய் பிளந்து கிடக்கும் மண்ணில்

பச்சையங்களை இழந்து நிற்கும் மரங்களின் நிழல்களில்
இளைப்பாறும் பசுவொன்று
சுற்றும் முற்றும் பார்வைகளால்

கொட்டகையில் பசியோடிருக்கும் பச்சிளங்கன்றுக்கு
உலர்ந்த இலைகளை தேடியதில்



கண்ணுக்கெட்டிய தூரம்வரை

வீசும்காற்றின் வேகத்தில்
பறக்கும் மண்புழுதியைத்தவிர
எதுவுமேயில்லாததால்

முடிச்சினை அவிழ்த்து
பங்காளியின் பயிரினில் மேய்ந்ததால்

மொட்டைப்பனையில் கட்டி பசுவுக்கு தண்டனை

சமரச உடன்பாட்டில் அபராதம் செலுத்திடும்
முதலாளி வரும்வரை.

கவிஞர் கோவை ஆனந்தன், குமாரபாளையம்(கிணத்துக்கடவு)

# பாடுபடும் பண்டைய மொழி

தாயிடம் பார்ப்பாயா பாகுபாடு
தமிழிடம் பார்க்கிறாயே வேறுபாடு
என்னடா இல்லை தமிழிடம்
எதை நீ தேடுகிறாய்? தனியாரிடம்.
எனக்கு ஒரு சந்தேகம்
தனியாரிடம் தஞ்சம் புகுந்தளா சரஸ்வதி?
உங்களின் இந்த வினைச் செயலைக் கண்டு
அவர்களின் விரல்களும் வீணையில் வாசிக்கிறது கோரராகம்.

எதிர்பார்த்தாய் வேறுபாடு சீருடையில் பார்த்தாயா?
சின்னஞ்சிறு நெஞ்சினில் பார்த்தாயா?
தமிழ் வழி கல்வி என யோசித்தாயா?
அல்ல தமிழே வேண்டாம் என யோசித்தாயா?

"மனித மனம் பொல்லாதது"
தனியாரிடம் பணம் கொட்டிக் கொட்டி
படிக்க இடம் வாங்கும்
படிப்பு முடிந்ததும் வேலைக்கு மட்டும் அரசாங்கம்.
வேலைக்கு மட்டும் அரசாங்கம்
அரசுக்கல்வி என்றால் மனம் பின் வாங்கும்.



பெரியாரையே பெயர்தெடுத்த நாடு இது
இங்கே பகுத்தறிவு குறைவதில் ஆச்சரியம் எது?
பகுத்தறிவு இங்கே கழுவி கவுத்த பாத்திரம் ஆனது
மழலை தமிழ் இங்கே மாண்டு போனது
மழலை மொழியிலே அம்மா மம்மியா ஆனது,

இங்கே சிந்திக்க வேண்டியது
என் தாயும் தகப்பனும்
கல்வியில் தரம் பார்த்தால்
நாடு எப்படி உருப்படும்.

தமிழ், தமிழர்கள் உடல் கொடுத்த
காலங்கள் சீர் எடுக்க
தமிழரின் நாவழி வந்து செம்மொழியானது
இன்று தமிழரே தமிழ்ப் பேச
தரம் பார்க்க அதன் தரம் மாறி போனது.
சிந்தித்துப் பார் மனிதா ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்.
சிந்தித்து சிந்தும் வியர்வை துளிர்க்கு அரத்தங்கள் பல நூறு
கல்வியை நீ காசிற்கு வாங்கினால் இந்நாடாகும் சுடுகாடு.

பலர் தனியாருக்கு கொடுத்திடும் பணத்தினில்
பல பள்ளிகள் அமைக்கலாம் வாருங்கள்
அதில் ஏழையும் பாழையும் படித்திட
தரமான கல்வியும் தாருவோம் வாருங்கள்
பல பள்ளியை ஒப்பிடும் போதிலே
சிறைச்சாலைகள் தேவலாம் போலவே
சிறைச்சாலையை மூடச் சொல்லி குற்றவாளியை
பள்ளிக்கூடம் அனுப்ப போகிறான் போலவே.

கவிஞர் ஆரூர்.சிவ.மணிவேல்,வடபாதிமங்கலம்

# நெடுஞ்சாலை

தனிமையில் இனிமை காண
சர்ரென்று மோட்டார் வாகனத்தில்
காதலியோடு பறக்க!
குடும்பத்தோடு நேரத்தைக் கழிக்க!
சுற்றுலா செல்லும் பயணிகள்
காரில் உல்லாசமாக போக,
தேசாந்திரம் போகும் சாதுக்கள்
கால்நடையாய் நடக்க!
பயண நேரத்தைக் குறைக்க
அடர்ந்த வனத்தை வெட்டி
பசுமையைப் போக்கி
வாயில்லா ஜீவன்களின் கூட்டை அழித்து
ஒதுங்க இடம் இல்லாமல் செய்து
நெடுஞ்சாலை அமைக்கும்
தன்னலம் மிக்க மனிதனை
கேட்பார் யாருளரோ?
கண்ணீரில் மிதக்கும் பறவைகள்
கூடமைக்க வழியின்றி
வெறிச்சோடிக் கிடக்கும்
நெடுஞ்சாலைகள்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-73

# நான் தஞ்சம் கொண்ட நெஞ்சம்

கருவறை இருப்பது
வயிற்றில் என
நம்பிக் கொண்டேன்;
என்னைப் பேரன்பினால்
சுமக்கும்
உன் இதயமும்
கருவறை தான் என
அறியும் வரையில்.

ஓர் உயிர்
தன் தாயின் கருவறையில்
இருப்பது வரம் என்பேன்.
அந்த வரம் கூட
பத்து மாதங்களுடன்
முடிந்து விடுகிறது.
ஆனால் எனக்கோ
காலம் முழுவதும் வாழ
உன் இதயமெனும்
கருவறை கிடைத்துள்ளதடி.



நீ வாழ்வாய்க் கிடைத்தது;
நான் என்று செய்த தவமோ
தெரியவில்லையடி தாரமே.

கவிஞர் MNM.முஸ்ரிப்,கட்டுகெலியாவ

# கூறு குருநாதா! வடிவேலா!

உனையின்றி துணையுமில்லை எனக்கிங்கதனால் எந்தன்துயரம்
தீர்ப்பதன்றியுனக் கோர்வழியுண்டா கூறு!
எனையின்றி உனக்கடியாரா யிரமாயிருப்பினும் கதியாகவுன்னை
நினைப்பாரெனைப்போல் யாரிங்குவுண்டு சொல்லு!
நின்புகழின்றி வேறொன்றில்லை நானிங்குபுகழ வதனாலுனக்கதைக்
கேட்பதன்றி வேறுவழியுண்டா விளம்பு!
என்னிட்டம்போல் வாழவிங்கு வழியுமில்லேன் திறனுமில்லேன்
உறவுமில்லேன் உறமுமில்லேனெனக் குநீயேகாப்பு!
எப்பிறப்பு நானிங்கினி பிறப்பேனோநான் அறியேனதனால்
இப்பிறப்பிலேயே உன்னையுணர உதவு!
தப்பேதும்நான் செய்திருந்தாலும் அப்பாவிஇப் பிள்ளையிவனென
தப்பாதுநீயும் எண்ணுவாய்தானே சொல்லு!
எப்பாடுபட்டே னும்நானிங்கு நற்பிள்ளையென பெயர்பெறவே
நாய்படும்பாடெல் லாம்படுகிறேனதை நீநம்பு!
சாப்பாட்டின்மேல் கொண்டகாதலைக்கூட கைவிடாகாதலன் என்னை
சரவணனேயுன் மீதுதீராக்கா தலனாக்கு!
இச்சையெதுவும் எனக்கில்லை ஆயினும் இங்குவாழ்வோரின்
வளமிகுவாழ்வு என்கண்ணையுறுத் துவதொழி!
மிச்சமேதுமின்றி இந்தவிப்பிறவி யிலேயேயெல்லாத் துயரையும்
அனுபவித்தே கடக்கவறியவாம் பிறவிக்கடலை
அச்சமின்றி கடந்தே கந்தாவுந்தன் திருவடியில்
கரைசேரவொரு நற்பாதையை உபாயமாய்த்தா!
உச்சிமுதலடி வரையடியேன் என்னை மறந்து உனைநினைக்க
குருநாதா ஞானமதையெனக் குவுபதேசி!
இவ்வாங்கில ஆண்டின்று முடிவுக்கு வருகின்றவேளை
முருகாநுந்தன் மனக்கோபமின்னும் தணியலையோ?
இளங்குமரா கொரோனாகொடுந் துயரம்தீருமெ னவொருநல்சொல்
விளம்பாயோ நீயெனக்கே; அப்படிவிளம்பின்
இங்கெமக்கதுவே நல்லதொரு புத்தாண்டு வாழ்த்தாகும்;
இக்கவிபடிப்போர்க் கிங்குயானுரைத்தேன் புத்தாண்டுவாழ்த்து!



கவிஞர் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# யூதகுல தேவமகனே வாருமைய்யா

அதிகாலைப் பொழுதில்
பாலனைத் தேடுங்கள்
அவனியில் உதித்த
நிலவனைக் காணுங்கள்

காரிருள் நடுவில்-அன்னை
மாரிமகனாய் பிறந்தவரே
கொட்டும் பனியில்-குளிரும்
சூரியராய் உதித்தவரே

மாட்டுத்தொழு கோட்டையிலே
வந்தபிறந்த மன்னவரே
மனிதகுலம் சிறக்கவைத்த
மனிதவுரு ஆண்டவரே

மாட்டுவண்டி பூட்டிக்கிட்டு
களத்துமேட்டில் போகையிலே
கர்த்தரேசு பாட்டெடுத்தால்
கவலையெல்லாம் ஓடிப்போகும்



பாய்மரத்தை ஓட்டிகிட்டு
நடுகடலில் வலைவீசயிலே
நம்பிவந்த உசுரெல்லாம்
நாதாகையில் பொழச்சிருக்கும்

ஒத்தவேல சோத்துக்காக
மண்ணவிட்டு கடலுவந்தோம்
ஒன்னவிட்டா யாரிக்கா-இந்த
ஒட்டுமொத்த கூப்பத்துக்கும்

யூதகுல தேவமகன்
எங்க ஏசைய்யா
உப்புகடல் உறவாளி
எங்க ஏசைய்யா

மனிதகுலம் மீள்வாழ
மன்னவரே வாருமைய்யா
ஏழைமன மாளிகைக்கு
ஏசுசாமி வாருமைய்யா

கவிஞர் செந்தமிழ்சுபபாரதி,மதுரை

# நெஞ்சையள்ளிப் போனவளே

காலை கதிரவன் இருள் விரட்ட
ஏருழவன் நானோ வயல் உழுவ
என் தோளு மேலே கலப்பையோட
வயலுக்கு நடந்து நானும் போகையிலே
எந்தன் வயலின் பக்கம் ஆற்றங்கரை
அங்கே அழகுப்பெண்களின் ஈர்ப்பு வலை
நீயுமங்கு வருகையிலே மதி மயங்கினேனே
உன் பேரழகில் நானோ சாய்ந்தேனே
தேவதை உலகின் இளம் பெண்ணே
காதலோடு என்னை நீ மணக்கையிலே
என் உயிரை உயிலாய்த் தருவேனே
என் நெஞ்சை அள்ளிப் போனவளே



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்

# வாசலிலே பூசணிப்பூ

மார்கழி பனி மச்சு வீட்டையும் பிளக்குமே
வைகறை நேரம் கூடுதல் அழகே
பனி படலத்தை தன் மீது போர்த்திக் கொண்டு
கொண்டாடுவது எத்தனை அழகு
பார்க்க நம் கண்கள் போதாதே
மார்கழி என்றாலே பாவை நோன்பு ஆகுமே
வீதிகள் தோறும் பச்சை இலை மீது
வெள்ளி கம்பளம் விரித்து அரிசி மாவில்
வித விதமான புள்ளியிட்டு வளைந்து
நெளியும் கோலங்கள் என்னை அழகு
சுகமான குளிரில் அதிகாலை உறக்கம்
அழைத்தாலும் கேட்காது குரல் மாயமாய்
விடியலுக்கும் விழிப்பிற்கும் இடையே நடக்கும் போர்
தம் கண்கள் பார்க்கும் தூரம் வரை
கனவுலகில் வருவது போல
பச்சை பசேல் என அசைந்தாடும் நெல் மணிகள்
காற்றோடு சேர்ந்து நம்மையும் கிரங்க வைக்குமே
மார்கழி திங்களில் பூக்கும் பூக்கள்
காதலை நினைவுக்கு கொண்டு வருமே
மனமெல்லாம் மார்கழி
மனதிற்கு பிடித்த மாதம்
மாதங்களின் உயிர் மூச்சு
மார்கழி மாதம் முடிந்தாலும் குளிரானது
பூக்களின் வாசத்தோடு
ஊரெங்கும் பரவி அடுத்த வருட
மார்கழியும் நினைவுக்கு கொண்டு வருமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே!
முதலும் தமிழே!!

# என்நிலை

உந்துருளி உருண்டோடித்தான் இருக்கு
ஊருவிட்டு ஊருதாண்டி ஓடிக்கிட்டுதான் இருக்கு
உடல்தேய்ந்து உருவம்மாறி
வயசு மட்டும் போனபாதையில் ஏறிப்போச்சு

கடிகாரம் அதன்பாதையில் போனது
நாட்காட்டியும் அதன் பின்னால் ஓடியது
சேமிக்க பணம் கையில் இல்லை
வார்த்தையில்தான் சம்பளத்தின் எண்ணிக்கை

ஆழ்ந்த தூக்கம் எப்போது கொண்டேன் தெரியவில்லை
மண்டையில் அதுபற்றிய நினைவிடமும் இல்லை
கடல் இரைச்சலில் காது மூழ்கியது பலநாள்
வாகன இரைச்சலில் காது நீந்துவது ஒவ்வொருநாள்

வயிற்றுப்பசிக்கு
வாழ்க்கையை சாப்பிடுகிறேன்
வாழ்க்கையை சமைக்க
என் வயதினை வேகவைக்கிறேன்

கவிஞர் ஹஸன்எம்பஜீத்,இலங்கை

# பாரடி பெண்ணே!



நிந்தன் விரல்
பிடியில் காணும்
உலகில் நீயில்லை.

கைவிரித்து
அகக்கண் கொண்டு
நோக்கடி.

அர்த்தமுள்ளதாகவும்
அன்பு நிறைந்ததாகவும்
அழைத்துச் செல்லும்.

அஞ்சி ஒதுங்கி என்ன
செய்வது; அடிமையில்லை
நான் என்று துயிலெழு.

தோல்வியோ, துயரோமோ
நம்மை அறிந்துக் கொண்டு
மீண்டு வரத்தான் என்பதை
உணர்ந்துக் கொள்.

தனிமையில் நீ வாடிடும்
நிலையே இல்லை.
இயற்கை உன்னோடு
உள்ளதடி; பிரபஞ்ச ரகசியம்
பற்றி விவரித்து கொண்டே!

கவிஞர் வாணிசுந்தரம், பெங்களூர்


# குடி டாஸ்மாக்

குடிகளை கெடுக்கும் குடி
உன்னால் அழிந்த குடிகளை
எண்ணமுடியுமா

உன்னால் குடும்பத்தை
நடுத்தெருவில் விட்டு விட்டு போன எத்தனை
அப்பாக்கள்.

கடவுள் தந்த பொக்கிஷங்களான
உடல் உறுப்புகளை செல்லரிக்கும்
உன்னை விரும்பும் காரணங்கள் யாதோ.

தாயாக போற்ற வேண்டிய பெண்ணினங்களை
உன்னால் இழிவுபடுத்திய கொடுமைகள்
எத்தனை எத்தனையோ?




எவ்வளவோ நல்ல ஆண்மகனானாலும்
உன்னை தொட்ட மறுநொடி
அவனின் அழிவை தேடும்
அவல நிலையை என்ன சொல்ல.

குடி குடியை கெடுக்கும் என்று சொல்றாங்க
குடியை (குடும்பத்தை)
மட்டுமா கெடுக்கிறது.

அவனின் அடையாளத்தை
அவனின் தன்னம்பிக்கையை
அவனின் வம்சத்தை
அவனின் பொருளாதரத்தை
இதையெல்லாம் இழக்க காரணமான
உன்னை இழக்க அவன் விரும்பவில்லையே.

அதன் காரணம் யார் அறிவாரோ?
கண் முன்னே நடக்கும் அவலங்களை
பட்டியலிட முடியவில்லையே

கவிஞர் கவிதாயினி சுமதி தசரதன்,சென்னை

# வேதனை

துண்டு துண்டாக
வெட்டப்பட்ட பிறகும்,
இறைச்சிக் கடையில்
குருதியுடன் தொடர்கிறது
புளிய மரத்தின்
வேதனைக் காட்சிகள்!



கவிஞர் அனல் நிலவன்,கொசவபட்டி

# சிலையானாள் காதலி!

களவில் நடந்த கடிமணம்
தன்னைத்
தாய், தந்தை அறியார்.
உயிரினும் சிறந்த ஒண்பொருள் ஈட்டிட,
நன்று புரி காட்சியாம்
எம் காதலன்,
ஆள்வினை செலவு புரிந்திட,
புலவுத் திரைப் பெருங்கடல் வங்கத்தில்,
வளி வழி விரைந்து
செலுத்தும், நீகானோடு
சென்றனன்.
அறனின்று அலைக்கும்
வாடையும் இதோ வந்துற,
கடிமனை மாடத்தில்
கங்குல் வீசத்
திருந்திழை அணிகள்
நெகிழ்ந்து கவினழிய,
வைகல் தோறும்
பசலை பாய,
பனிவார் கண்ணேம் ஆகி
தொல்வினைப் பயனென்று ஏங்குகிறேன், யான்.
அழிபடர் அகல அவர் வருவாரோ?
அன்றி,அருளிலர் ஆனாரோ?
பொருள் புரிந்து உள்ளார் கொல்லோ?
உள்ளியும் சிறந்த செய்தியின்
மறந்தனர்,கொல்லோ?
தொன்னலம் சிதைய
நிற்கும் என்னைத் தேடி
இன்று வருவாரோ?
என்று மனதில் எண்ணி
வாயிற் கதவருகில்
சிலையானாள்,காதலி.




கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# பூங்கா வாசம்

பூங்காவின் வரவேற்பு. வருக வருக,
ஆணை - புற்கள் மீது நடக்காதீர்கள்,
வேண்டுதல் - தயவுசெய்து பூக்களை பறிக்காதீர்கள்,
சேமிப்பு - குடிநீரை வீணாக்காதீர்கள்,
ஆரோக்கியம் - சுத்தமாக வைத்திருக்கவும்,
ஊஞ்சல் ஆட்டம் - முன்,பின் முரண்பட்ட வாழ்க்கை தத்துவம்,
சர்க்கஸ் - சுகமான வாழ்க்கையதும் இறுதியில் வலியை கொடுக்கும்,

அன்பு காதல்
ஆரோக்கிய நடை
இசை பறவைகள்
ஈரக்காற்று
உற்சாகம்
ஊக்குவித்தல்
எளிமையான செலவு
ஏற்றமான ராட்டினம்
ஐம்பொறிகளின் மகிழ்ச்சி
ஒற்றுமை
ஓட்டப்பயிற்சி
ஔஷதம் இல்லா எழில் வாழ்க்கை!
எஃகு போன்ற உடல்!



கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# ஈகை

### அதிகாரம் : 23




பெறத் தகுதியுடைய
வறியவர்க்குக் கொடுத்தால்
அவர் முகப்பொலிவில்
இறைவனைக் காணலாம்.

இல்லாதவர்க்கு கொடுப்பதல்லாது
உள்ளவர்கட்க்கு ஈவதென்பது,
என்றேனும் திருப்பித்தருவார்
என்ற நோக்கத்திலேதான்.

பெறுதல் நன்றாயினும்
இரத்தல் நன்றல்லவே,
மேலுலகம் இல்லையாகினும்
ஈதல் நன்மையன்றோ.

நற்குடியில் பிறந்தோனிடம்
பெற்றுக்கொள்ள வருபவர்.
தான்வறியன் எனும்முன்னே
பொருளீந்து குடிகாப்பான்.

இரந்துவருபவர் முகத்தில்
பொலிமகிழ்வு காணும்வரை.
ஈகையாளன் மனம்
துன்பத்தில் வாடும்.

தவவலிமை உடையோனின்
பசிபொறுக்கும் ஆற்றலும்,
அப்பசிக்கு உணவளிப்போனின்
ஆற்றலினும் குறைவே.

பொருளுடையோன் தமக்கு
பிற்காலத்திற்காய் சேமிக்குமிடம்,
கொடும்பசி நோய்போக்கி
வாழவைக்கும் ஏழைமனமே.

தன்னுணவை பிறரோடு
பகுத்துண்ணும் குணமுடையோனை,
பசியென்னும் தீயநோய்
ஒருபொழுதும் அணுகாதே.


சேமித்த பொருளை
பிறர்க்கீந்து மகிழாது,
இழந்துவிடும் வன்கண்மையோன்
இன்பத்தை அனுபவியான்.

முயன்றுதேடிய உணவை
வறியோர்க்கீந்து உண்ணாதது
வறுமையின் சாதலைவிட
துன்பமானதன்றி வேறில்லை!

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# என்னை தேடும் காதலா

சில்லென்ற தென்றலாய்
வேட்கையென சேர
சிலிர்த்த விழிகளும்
அலை மோதுதடா காற்றோடு.



கருவிலே விதைத்த
காதலை கண் முன் தோன்றிட
நீ கடக்கும் நொடியெல்லாம்.
கூற முனைகிறேன்.

சற்று செவி சாயடா.
விழியால் மொழிந்திட செய்யடா.
சலனமற்ற மழலை வாசம்
நாசி துழைக்க பிஞ்சு விரல்களால்

வதனத்திலே வரைந்த கோலமாய்
சொக்கி நிற்கிறேன்
உன் குறுநகையில்.
காற்றோடு கதைக்கும் இலைப்போல.

எண்ணற்ற விண்மீனிடையே
நானும் ஒன்றாய் மின்னிட
அத்தனையிலும் உன் விழி
எனை தேடிட.

நாணம் கொண்டு வெட்கி வெட்கி
மிளிர்கிறேன்.
சற்று உற்று பாரடா.
சாந்தத்திலே சாரீரமாய்
உனை உணர்ந்த எனை போல

எனையும் நீ உணர்ந்திட
முயற்சிக்கொள் கோன் ஆனவனே.
கணையால் இருதயம் துழைத்து
நுழைந்த உன்னால்.

எனை நெருங்க நீயாய் வாராயோ.
வசந்த வாசம் தாராயோ.
தாரகை மணம் சுவாசிக்க
மனம் தளர்ந்து தேட முனைந்திடு.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# மறவா நட்பு

நட்புக்கு இலக்கணம்
இங்கு ஆயிரமுண்டு
வாழ்வில் மறவா
நட்பு நம் வாழ்விலுமுண்டு
மறவா நட்புக்கு உதாரணம்
ஏது சொல்வேன் யானிங்கு
கபிலரினதும் பாரியினதும்
ஆழ்ந்த நட்பைக் கூறவா
கர்ணனினதும் துரியோதனினதும்
தூய நட்பை புனையவா
அன்றேல் அர்ச்சுனனின்
அன்பைத்தான் உலகறியுமா
அழகிய நட்பென்றும்
அகத்தினின்றும் தொலையாது
கண்ணனினதும் குசேலனினதும்
களங்கமில்லா நட்பைக் கூறவா
நபியவர்களின் அன்பு நண்பர்
அபூபக்கரின் நட்பைக் கூறவா
மாண்டாலும் மண்ணறை
மீண்டாலும் வாழ்ந்திடும் நட்பது
மறவா நட்பின் சிறப்பு
திருமறையிலும் உயிர்வாழும்
திருக்குறளும் இவ்வுலகோர்
திருந்திட வழிகாட்டுமன்றோ



கவிஞர் ஆய்ஷ்,கம்பளை

# கலையாத கனவுகள்

நேற்றைய நாள் இன்றைய நினைவுகளாய்
அழகாக சேமிக்கப் பட்டிருக்கும்
எம் நினைவுகள் எனும் பெட்டகையினுள்
நினைவின் கரு எம் உயிரான
உறவுகள் பற்றியே இருக்கும்.
இலைகள் உதிர்ந்து மரம் சாய்வது இல்லையே
யார் வந்து போனாலும்
நம் வாழ்வு தேங்கி விடாது
எவ்வாறு மழையில் நனைந்து
அழகாய் துளிர்கள் துளிர்விடுமோ
அவ்வாறே நம் நினைவுகளும்
நினைவுகள் எனும் பொக்கிசப் பேழையோடு
நம் நாட்கள் அழகாய் நகரும்
என்றாவது ஒரு நாள்
இரவு வானை தனிமையிலிருந்து
நீ பார்க்கும் போது
மறவாத நம் நினைவுகளை ஆகாசத்தில் அலசிப் பார்
விண்மீன்கள் படை சூழ - நிலாநடுவில்
நம் ஞாபகங்கள் விழித்திரையில் ஓடும்.




கவிஞர் நிலமதி ராஜி,கல்முனை(இலங்கை)

# புல்லின் பனித்துளி

காற்றினில் எப்போது கலந்தாய்?
எத்துணை காலம் பயணித்தாய்?
எத்துணை பேரை சந்தித்தாய்?
எத்துணை பாடம் படித்தாய்?

எத்துணை ஞானியர்?
எத்துணை பாவியர்?
நீ கற்ற ஞான குருவா?
கற்றபின் மௌன குருவா?



எத்துணை பேரை நகைத்தாய்?
எத்துணை பேரை துதித்தாய்?
ஏன் நகைத்தாய்? ஏன் துதித்தாய்?
இங்கு வந்து ஏன் குதித்தாய்?

திரவமாய் எப்போது உதித்தாய்?
திடமாக எப்போது நிலைத்தாய்?
உன்னிலும் தூயவனை சந்தித்தாயா?
இல்லையென விளம்பத்தான் வந்தாயா?

பிரபஞ்சத்தில் நீயடக்கம் எனில்
உன்னுள் பிரபஞ்சம் அடக்கமா?
முதல் வெடிப்பு நிகழ்ந்தபோது
எங்கிருந்தாய் என் பனித்துளியே?

எனக்கொரு வரம் தா!
கூடுவிட்டு கூடு பாயும் அருள் தா!
திடமாய்! திரவமாய்!! வாயுவாய்!
மொத்தத்தில் வாழ்வே ஒரு வரமாய்!

யாரையும் உறுத்தாத ஒரு நேர்வு!
எனக்கெப்போது வாய்க்கும்?
மலர்களின் இதழ்களில் எப்போது பூக்கும்?
சூரிய ஒளியாய் எப்போது துலங்கும்?

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# நல்லதோர் வீணை

அதிகாலை
வெண்மையானது
தூய்மை வாய்ந்தது
சாந்தம் குடிக்கொண்டது
அங்கே
பழமை இல்லை
பழைய ரணங்கள் இல்லை
பழையவை கழிந்து
புதியவை கொழிக்கும்
பறவையாய் எழுந்து மனம்
வானிலே பறக்கும்
புதிய பாதைத் தேடி
மனப்பறவை
அந்த நாளைக் கழிக்கும்
கனலும் தீ
அங்கில்லை
காயும் வெயிலும்
அங்கில்லை
பாந்தமான
அமைதியின் சுகானுபவம்
பவித்திரமான அழகில்
அனைத்தும் பணிந்து
அடங்கிப் போகும்
நல்லதோர் வீணையை
உள்ளம் மீட்டி
உவகை கொள்ளும்.



கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# காதல்

வெண் பனிக் கொட்டியிருக்க
வாசல் தெளித்து கோலமிட்டாள்
வாசனைப் பூக்கள் மணம்வீச
வண்டுகளின் ரீங்கார ஓசையும்!



வண்ணமயில் அகவுசெய்ய
மங்கையும் மங்களமாய்
பாவாடை தாவணியில்
மனதும் மகிழ்ச்சிகொள்ள!

மொட்டவிழ்த்த பூவாய்
மோகனக் காதல்
முல்லை அரும்பாய் பூத்திட
முகமதுவும் நாணத்தில் சிவக்க!

சிங்காரியவள் சேலையில் ஜொலிக்க
சில்லென்று காற்றும் மேனிதழுவ
மௌனப் பார்வையும்
மௌனம் பேசியது!

கவிஞர் ஜெயா ஸ்ரீ,லண்டன்

# அக்கா மகள்

தாய்மைப் பெறாத
தாயானேன்.
என் அக்கை
மகள் எனும்
உன்னால்.

பத்து மாதங்கள்
என் கருவறையில்
உன்னை சுமந்திடவில்லை;
என்றாலும் ஆயுள் வரை
நெஞ்சினில் சுமந்திடுவேன்.

முதல் வாரிசு என்றதால்
எவரிலும் செலுத்திடாத
மொத்த பாசமும்
உன் மேல் மட்டும்
நிலையாகிக் கொண்டதம்மா.



நிலவினாலான வதனத்தில்
இருளால் செதுக்கிய
இருவிழியையுடைய
பேரழகை வியக்க வைக்கும்
இங்கிலாந்து இளவரசியே!

உன்னை இரசிக்க நினைக்கையில்
நீ தொலை தூரம்
என்ற வருத்தத்தைத்
தாண்டி வேறேதும்
இல்லையடி கண்ணே.

குறையா எதிர்ப்பார்ப்புடன்
உன் வருகையை
எண்ணி எண்ணி
எந்நாட்களையும் கடக்கிறேன்
மெல்ல மெல்ல.

கவிஞர் சன்ஹா நிஜாம்,புத்தளம்(இலங்கை)

# சிலம்பு விளம்புகிறது

சிலம்பு விளம்பியது முப்பெரும் உண்மைகளை
கற்பின் அணியாய் கண்ணகி திகழ்ந்தாளே
வெற்பில் சிகரமென கோவலனைப் புகழ்ந்தாளே

கோவலன் மாதவிபால் ஆவலனாய் ஆனானே
கேவலனாய் எண்ணாமல் கண்ணகியும் பொறுத்தாளே
அறச் செயல் புரிய மறுத்தாளே
மயக்கம் தயக்கத்தோடு விடை பெறவே
வழக்கம்போல் கண்ணகியை அடைந்தான் காவலனே
வாழ்வதற்கும்  வாழ்க்கைக்கும் பொருள் தேவையென
தாழ்ந்த பொழுதே உணர்ந்தான் பொருளருமை
வீழ்ந்தாலும் வாழ்வதற்கு சிலம்பு தருவேனென்றாள்
போதவிழ்ந்த போதிலும்  உடன் வருவேனென்றே
காதல் தேசங்கள் கிளம்பிச் சென்றனர்
பாண்டிய மன்னனின் பொற்கொல்லன் ஒருவன்
தோண்டிய பள்ளத்தில் வீழ்ந்தான் கோவலனே
மாண்டவன் புகழை  மீட்டாள் கண்ணகியே




கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# பயணத்தின் படிகளில்!

கனவில் வரைந்த ஓவியங்கள்
அவள் முகம் தேடி!
கடவுள் வகுத்த நாளினிலே
அவளோடே பயணித்த நாட்கள்
படிப்பித்தன பிரிவின் வலிகளை!

நேரம் போதவில்லை நாட்குறிப்பின்
கடமைகளை நிறைவேற்றிட நினைத்தும்!
முழுமையாய் முடித்திடவே முடியாதிருந்தும்
முழுவதும் முடிந்தவரை இணைந்தே
பயணித்ததே நிறைவு மனதினிலே!



எந்நாளும் இணைந்திருக்க இயலாதிருப்பினும்
எண்ணங்களில் இணைந்த பயணமிது!
வாழ்க்கையின் திட்டமிடலில் இழப்புகள்
வாழ்வின் அங்கமாய் அமைந்திடினும்
மகிழ்வின் சதவீதம் அதிகமே!

உதவிக்கோ மகிழ்வுக்கோ கதைப்பதற்கோ
காப்பதற்கோ தேற்றவோ ஆலோசிக்கவோ
சொந்தங்கள் குறைவே இன்று!
எதிர்மறையாய் சிந்திக்கும் காலத்தினும்
உதவிடும் ஆறுதல் நட்புகளே!

இழப்புகளையும் எதிர்மறையாளரையும் விட்டொழித்து
குறிக்கோள் குலையாமல் காத்திருப்போம்
பட்டுப் பூச்சியாய் கூட்டினுள்!
இனியதொரு நாளினிலே பறந்திடுவோம்
இணைந்தே பட்டாம் பூச்சியாய்!

கவிஞர் செல்வகுமரன் சுரேஷ்குமார்,சீனா

# " அ "

அனையாதொரு தீபம் லேசாய்
அசைந்திடும் நேரம் தன்னில்
அழகான மாது ஒன்றை
அறிமுகம் கண்டு கொள்ள.

அக்கினிச்சுடர் பட்டுத் தெரியும்
அவளென்ன நிலவின் துகளோ
அணிகலன்கள் ஏதும் அணியா
அல்லிப்பூ மகள் தானோ.



அரசன் எனை கொள்ளை கொண்ட
அரசியும் அவள் தானோ - என்
அந்தப்புறம் ஆழ வந்த
அழகியும் இவள் தானோ.

அரண்மனைத் தோட்டத்தின்
அதிகாரம் உனக்கல்லவா
அம்பு விட்டு என் இதய
அரணை நொறுக்கியதும் நீயல்லவா.

அரளிப்பூக் கொளைகாரி என்னை
அகழியில் தவிக்கவிட்டுச் செல்லாதே
அரிவாள் விழி கொண்டும் வெட்டாதே
அதோ அத்தை உனை அழைத்துவிட்டாள்.

அஞ்சல் அட்டை அனுப்பட்டுமா
அலைபேசியில் அழைக்கட்டுமா
அழைப்பிதழ் ஒன்று தந்து விட்டுப் போ
அமெரிக்கா என்றாலும் தேடி வருவேனே.

கவிஞர் சர்ஜூன் ஹஸ்னான்,கல்முனை

# அவசர உலகம்

நின்று பேசிட நேரமில்லையாம்!
நிதானித்து உறவாடிட வழியில்லையாம்!

இறைவனை நினைத்திட தோனவில்லையாம்!
இன்முகம் காட்டிட இயலவில்லையாம்!

கைகளில் பையுடனும் கால்களில்
சக்கரம் கட்டியவாறே ஓட்டமாம்!
ஏனென்று கேட்டால்
அவசரத்தில் வந்திட்ட பணிச்சுமையாம்!

குடும்பத்தினருடன் மனமகிழ்ந்து
கொஞ்சி குலாவிட இல்லாத நேரமதில்
குடியை நோக்கி ஓடிடுவர் குருடர்களாய்!

அவசர அவசரமாய் சாலைகளில் வாகனமதை இயக்கியே
அவசரமாய் சென்று சேர்கின்றனரே காலனிடமும்!

அவசரத்தில் இழந்தனவற்றை அறியாது
அவனியில் ஆழ சிந்திக்கும் திறனறியாது!



அவசரமாய் அகிலத்தில் வாழ்ந்து
அவசரமாய் மரித்துப் போகின்றனரே!

தானத்தில் சிறந்த தானம்
நிதானம் என்றும் உணர்ந்திடுவோம்!


அவசர உலகில் ஓர் நாளாவது
ஆரவாரமின்றி உலவிடுவோமே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# அன்பின் அடையாளம் அப்பா

கறாரான குரலாய் உன்னை கட்டுப்படுத்தும்
கண்டிப்பான
பெரிய வயது குழந்தை அப்பா

அன்பின் அடுத்த பிம்பம்
அன்றாட வாழ்வில் அடிக்கடி வந்து போகும்
கண்டிப்பான வாத்தியார்



உன் இன்பங்களை
அவர் சோகங்களாய்
தினம் சுமப்பவர்

மாடாய் உழைத்து
மரமாய் தேய்ந்து போகும்
மாசற்ற மனிதன் அப்பா

எத்தனை கோடி துளிகள் கண்ணீர் விட்டாலும்
மூழ்கி போவது அவர் வேல்வியின் எச்சம்
நான் கண்ணெதிரே கண்ட என் தந்தையின் மிச்சம்

மாசடைந்த ஆடைகளை
உடுத்தினாலும்
அவர் அழகாக தெரியும்
என் கதையின் நாயகன்

பேனாவில் மை தீர்ந்தாலும்
என் கவிதை தீராது

கவிஞர் கனவு கவி,சேலம்

# முதல் மழை

தொலைந்த நேரத்தை
துரத்தி பிடித்தேன்

கலைந்த கோலத்தை
காகிதமாய் சேர்த்தேன்

முடிந்த பயணத்தை
முந்தானையில் தொடர்ந்தேன்

தொடர்ந்த இரவிலே
அலர்ந்த மலரிலே

அமுதமாய் தேன்வடிய
நுகரும் வண்டாய்

நூதனமாய் பருகிட
மயங்கி விழுந்தேனே

மயங்கிய நொடியினை
மதிப்பொழுதில் இழந்தேனே

கன்னி வலையிலே
கன்னிவெடி முளைத்திட

கன்னத்தில் வெடித்தேனே
முத்தமாய் சிதறினேனே

அள்ளி சேர்க்கையிலே
இல்பொழுதில் முடிந்திட



முக்காலத்தில் படர்ந்த
முதல்மழை நீயே

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# பிழை திருத்தம்

நான் நிம்மதியாக இருக்கிறேன் என்பதை
வாய்வார்த்தையாக மட்டும் சொல்லி செல்கிறார்
கண்ணீர் நிரம்பிய ஒருவர்

காலணிகளை வாசலில் விட்டு நுழைகின்ற வேளையில்
எங்கெல்லாம் தன்னை விட்டு சென்றார் என
இறுதி சுற்றுக்கு லாவகமாக நகர்கிறது
காலணிகளை பற்றிய பாதப் பதிவுகள்

கதவுகளை திறந்தால் மூடுவிடவும் என்பதில்
பாதுகாப்பு மட்டுமல்ல
மறைமுகமாக சொல்லிவிடுகின்றனர்
நாசுக்கான புரிதல் விவரங்களை.

பட்டத்தின் கயிறோடு பயணிக்கும் நமக்கு
காற்றின் அழுத்தம் தனை
எதிர்கொள்வது இயலாமலா போய்விடும்.

சரிசெய்ய இயலாத பிழையோடு முறிந்த கிளைபோல்
தொங்கலாடும் மனங்களுக்கு அவ்வப்போது
மழைபோல் நம்பிக்கை துளரூட்டி செல்வது
அன்றாடம் தேவைப்படுவது இயல்பு தான்.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# தேடல்

அறியாமை என்னும் இருள் நீங்க
அறிவு என்ற புத்தகத்தின் தேடல்.
கல்லாமை என்னும் நிலை
இல்லாது கற்றலின் தேடல்.
இயலாமை என்ற சொல் தவிர்த்து
இயலும் என்னும் வெற்றியின் தேடல்.
முயலாமை என்ற சோம்பல் முறித்து
முடியும் என்னும் உற்சாகத்தின் தேடல்.
பொறாமை என்ற தீயை அழித்து
அன்பு என்னும் தீபஒளியின் தேடல்.
தள்ளாமை காணும் வயதில்
தாங்கி பிடிக்கும் கரங்களின் தேடல்.
சொல்லாமை என்றும்
கொல்லாத சொந்தத்தின் தேடல்.
ஆற்றாமையின் துயர் நீக்க
அணைக்கின்ற கரங்கள் தேடல்.
அமைதியான வாழ்க்கையில்
அழகான நினைவுகளின் தேடல்.
பொல்லாமை நிறைந்த பூமியில்
பொறுமையின் மனம் தேடல்.
இல்லாமை என்ற சொல்
இல்லாத அன்பு நிறைந்த குணம் தேடல்..
நிலையாமை என்னும் உலகில்
நிரந்தமில்லை தேடல்கள்.
தேடி தேடி அலைந்திடும் மனமே
தேடலில் கிடைப்பதில்லை ஞானமே.
இரக்கமில்லா இதயத்தில்
இறைவனும் இருப்பதில்லை.




கள்ளமில்லா உள்ளத்தில்
எல்லையில்லா அன்பை தேடு.
உண்மையான அன்பில்
உரிமையான உறவை தேடு.
நெஞ்சில் புதைந்திருக்கும்
அழகான நினைவை தேடு.
பிறவி பலனாம் நிதர்சனத்தில்
இனி பிறவாமை என்னும் நிலையை தேடு.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# வாழ்க்கை பாதையின் சுகமே

வசந்தம் பிறக்கும் நேரம் - என்
புது வாழ்வின் துவக்க நேரம்
மனங்கள் இரண்டு ஒன்று சேரும்
மனதில் சுக ராகம் பாடும் கீதம்

வாழ்க்கைப் பாதையின் முதல் துவக்கம்
வாழ்நாள் வரை இது தொடரும் - இனி
வாழ்க்கை பாடம் துவங்கும் பள்ளி அறையிலே அவர்
வாழ்நாள் குடும்பத்தின் தொடர் கதையே

அறிந்தது புரிந்தது எழுந்தது அவர் வாழ்வினில் சிறந்தே
ஆரம்ப துவக்கம் இனிதே கலந்தே மகிழ்ந்தே
கடந்து வந்த பாதை காணும் சுகமே இதுவே
காலம் நமக்கு கற்றுத்தரும் பாடமே



காலை சூரியன் வரவு கடமையை துவங்கும் அழகு
நாளைய வாழ்வின் பாதை நலம் பெற வேண்டுமே
வேலையை தினமே உயர்வாக செய்தாலே போதுமே
நாளைய வாழ்வும் இணைந்து நாளும் சிறப்புமே

வாழ்க்கை என்பது வாழ்வதற்கு அதை
வீணாய் நினைத்து பார்க்காதே இருவரில்
விட்டுக்கொடுத்து வாழ்வதுதானே இருக்கு
பட்டுப்போகாது உயர்ந்தே வாழ்க்கை பாதையின் சுகமே

கவிஞர் அஞ்சல் தஞ்சைதாசன்,மடிப்பாக்கம் 91

# இன்று வரை!

பூச்சிகள் அண்டிய
கீரை,
புழுக்கள் ஊறிய
காளிபிளவர்,
அழுகிப் போன
தேங்காய்,
பழுத்துப் பலரசம்
ஆகின வாழை,

ஊசியால் முளைக்காத
உருளைக் கிழங்கு,
வெள்ளைப் பூச்சி
அண்டிய கருவேப்பிலை,
ஜவ்வாய் பிரிந்து
வரும் கொத்தமல்லி,



செதில் செதிலாய்
வெட்டிய கேரட்!
ரத்தம் சிந்திய
பீட்ரூட்,
பனங்காய் போல்
பெருசில்லா தக்காளி
முதலானவை
முக்காளி போட்டு
விற்பளே - அந்தக்கிழவி!

அவளிடம் தான்
இயற்கை விவசாயம்,
இன்று வரை உண்மையாக
நடக்கிறது!

கவிஞர் சு.சிவனேஸ்வரன்,கோவை

# ஹைக்கூ

சட்டென கலையும்
கூடியிருந்த மேகங்கள்
வானில் சிறகசைக்கிறது பறவை.

பரந்து விரிந்த வயல்வெளி
இருளிலும் அழகாகத் தெரிகிறது
லாந்தர் விளக்கொளி.

கொட்டும் மழை
குடைக்குள் குழந்தை
அன்பில் நனைகிறார் அம்மா.

காற்றில் பறக்கும் இறகு
நாசி துளைக்கிறது
கோழிக்குழம்பு வாசனை.

யாரும் ஆதரவில்லை
தனியே தவமிருக்கிறது
ஊருக்கு வெளியே ஆலமரம்.



கவிஞர் ச.கோபிநாத், சேலம்

# வண்ணப் பிரதிபலிப்பு

கற்பனை மொழிக்கு
உருவம் கொடுத்து
கருங்கற் பாறையை
பதமாகக் குடைந்து
வண்ணக் கனவு
பிசகி விடாமல்
கருத்தில் ஊன்றியதை
கவனமாகக் கணித்து
எண்ணம் எங்கும்
சிதறி விடாமல்
இலக்கை மட்டுமே
மனதில் நிறுத்தி
வடிவாய் சிலைகளை
வாகாய் வார்க்கும்
சிற்பியின் ஆற்றல்
சிந்தனைக்கு விருந்து

உடலும் உள்ளமும்
ஒருங்கே சிலிர்க்க
நிஜமாய்த் தெரியும்
சிலையின் வடிவம்
நிழலாய்த் தொடர
மனதும் மகிழும்

கவனம் குவித்திடும்
உளியின் ஓசை
நாதசுரமாக காதினில்
ஒலிக்க
நாளாந்த விடியலும்
நலமாக அமைகிறது



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# புரட்சி மனதில் செய்

புரட்சி பிறந்திடும் பொறுமை இறக்கையில்
வரட்சி படர்ந்திடும் பசுமை அழிகையில்

வினைகள் சிறக்கவே புயலாய் எழுந்திடும்
கணைகளை வில்லும் முறையே அவிழ்த்திடும்

மனதில் புரட்சி மகிமை தந்திடும்
மனிதப் பண்பை சிறக்கச் செய்திடும்

பொறுமைக் குணமோ மேலாய் ஓங்கிடும்
வறுமை நிலையும் வருத்தம் நீக்கிடும்

மனதில் புரட்சி புதுமை புரிந்துகொள்
மனிதம் வளர்க்கும் முறைமை அறிந்துகொள்



அன்பும் அறமும் இனிதே மிளிர்ந்திடும்
இன்பம் அதுவோ இல்லம் பெற்றிடும்

துன்பம் நீங்கித் தொல்லை ஓடிடும்
தனமும் அங்கே குடியும் வந்திடும்

புரட்சியின் வினைகள் சாந்தியும் சமாதானமும்
புகழ்ச்சி மனைகளில் தந்திடும் சுகந்தமும்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி(இலங்கை)

# இருண்ட காலம்

ஆசிரியரை கையோங்கி
அடிக்கவந்த மாணவனை
தடுத்து நிறுத்த சகமாணவன்
தக்கசமயம் வரவில்லை

மாறாக கைபேசியில்
மாறி மாறி படமெடுத்தான்
தீச்சமூக ஊடகத்தில்
தீத்தீயாய் உலவவிட்டான்

முன்னேறும் தொழில்நுட்பம்
முரண்பாடாய் பண்பாடு
நாளடைவில் நாகரிகம்
நலிந்துவிடும் திருவோடு.



இதற்குமேல் இன்னுமிங்கு
இதைவிட கேவலமாய்
போதையோடு மாணவர்கள்
வகுப்பறையில் ஊர்வலமாய்

மாணவியின் மடிதேடி
மாணவன்மதி ஓடுதே.
பள்ளியறை இன்றைக்கு
பாழடைந்து போகுதே.

பிஞ்சிலே பழுப்பதெல்லாம்
அழுகிநாறத் துவங்குதே
மாணவ சமுதாயத்தின்
மானம் கப்பல் ஏறுதே.

ஆட்டம்போட்ட அசடுகளை
ஆசிரியர் அதட்டினாலே
அடுத்தநொடி சட்டம் வந்து
அவருமீதே பாயுதே.


காகிதத்தின் வெண்மையிலே
கரும்புள்ளிகள் கூடுதே
நிலவற்ற வானம்போல
நிரம்பி இருளும் வழியுதே.

களப்பிரர்கள் இருந்தகாலம்
இருண்ட காலம் என்றோரே
இருக்கின்ற இந்தக் காலம்
இருண்ட காலம் என்றுரைப்பேன்.

கவிஞர் மதுரகவி,மதுரை

# ஜென் கவிதை

ஆழ்கடலில் தான் புயல் உருவாகிறது
அது நிலத்தில்
சிறுமரத்தை வேரோடு சாய்க்கும்
பெரிய மரத்தை அசைக்கும்
அல்லது
அதன் கிளைகளை முறிக்கும்
ஆனால் அதே புயல்காற்று
மலை மீது மோதும் பொழுது
காற்றின் திசை தான் மாறுமே தவிர
மலைக்கு எந்த இழப்பும் இருக்காது
எத்தனை முறை  மோதினாலும்
காற்றின் திசையும் மாறிடும்
வலுவிழந்து கொண்டும் இருக்கும்
ஏனெனில்
மலை இயங்கிக்கொண்டு இருக்கிறது
மௌனத்தோடு.



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்

# எது சுதந்திரம்?

அன்று வந்தோரை வாழ வைத்தது
இன்று வாழ வழியில்லை
ஒருவேளை சோற்றுக்கு கையேந்தும் அவல நிலை
பணக்காரன் பணம் இல்லாதவன் என்றொரு பாகுபாடு
ஏழைக்கு ஒரு சட்டம் பணக்காரனுக்கு ஒரு சட்டம்
பணம் நினைத்தால் பாதாளம் வரை பாயும்

பணத்தின் பிடியில் சட்டம்
சாதிக் கொடுமை வன்புகழ்ச்சி வன்கொடுமை
பெண்களுக்கு நடக்கும் கொடுமை
பாலியல் வன்முறை.
குழந்தைத் தொழில் பசிப்பஞ்சம் பட்டினிக் கொடுமைகள்.

இன்றைய சுதந்திரம் கற்றுக்கொடுத்திருக்கும் பாடம்
இளமையில் வறுமை.
முதுமையில் தனிமை.
கல்வி என்பது வியாபாரம்.
அது சட்டத்தின் அதிகாரம்.

அறிமுகமானதோ கைப்பேசி
கிடைத்ததோ பிள்ளைக்கு துணைவாசி
இதனால் நடக்கும் தவறுகள் ஏராளம்.
இளமையில் அழியும் பரிதாபம்.




பெற்றோருக்கு இல்லை நேரம்
அதனால் போகும் பிள்ளையின் மானம்
தவறான செயல்முறை
தவறான நண்பனின் அணுகுமுறை

பறிபோகும் வாழ்க்கை
கேள்விக் குறியாகும் எதிர்காலம்
பெற்றோரின் கவனக்குறைவு
பிள்ளையின் வாழ்வே குறைவு

உதவிட ஒருவன் முன் வருவதில்லை
ஆனால் புறம் பேசும்பொழுது
அனைவரும் ஒன்றாகி விடுவர்
அவனமாம் ஏளனம் வீண் பழி
செய்யாத தவறுக்கு.

பார்த்தாய மானிடா எது சுதந்திரம் என்று
இன்றைய சுதந்திரம்
எங்கு செல்கிறது என்று பார்
என்ன பாடம் கற்றுக்கொடுக்கிறது என்று
மனிதன் வாழ நல்வகை செய்கிறது
இன்றைய சுதந்திரம் மாபெரும் வளர்ச்சி.
இளைஞர்களின் வீழ்ச்சி.

கவிஞர் ர.ரமேஷ்,திருப்பூர்

# முரண்பாடு

கண்ணாடியில் தினமும் என்முகம் பார்க்கிறேன்
ஏனோ அதில் உன்முகமே தெரிகிறது
உன் கண்கள் அழுகிறதோ? என்னிதயம் வலிக்கிறதே!
சண்டையிட்டாலும் மனது சந்தோஷமா இருக்குது

நீ பேசாத நொடிகளையும் ரசிக்கிறேன்
பேசப்போகும் அந்த நொடியை எண்ணியபடி
வலித்தாலும் சிரிக்கிறேன் உனக்கு வலிக்காமலிருக்க
நான் மரணிக்கவும் மாட்டேன் நீ தாங்கமாட்டாயென

காதல் அழகானதா தெரியவில்லை; ஆனால், ஆழமானது
உன்னை பார்க்கும் வரை பரித்தவிக்குது
பார்த்தாலே போதுமென்று மனம் துடிதுடிக்குது
பக்கத்தில் வந்ததும் பிரியவே கூடாதென நினைக்குதே

நினைத்ததை செய்யாமல் வேறேதோ செய்யுது
மனம் ஒன்று சொல்லுது அறிவொன்று சொல்லுது
நன்கு புரிந்ததாய் தோன்றுது புரியாமலே இருக்குது
சட்டதிட்டங்களை தளர்த்தினாலும் சங்கடமே மிஞ்சுது



உள்ளம் ஒன்றின் மேலேயே ஒன்றி கிடக்குது
பிடித்தவை எல்லாம் பிடிக்காமல் போகுது
பித்து பிடித்ததாய் மனசு குழம்புது
பக்கத்தில் துணையிருந்தால் பாதுகாப்பாய் உணருது

வேண்டாம் என உதறவும் முடியல
வேண்டும் என தொடரவும் தோணல
தெளிவானவனே திணறுகிறேனே தினமும் திகைக்கிறேனே
திசை எட்டிருந்தும் திக்கு தெரியவில்லை

மனதினை வீழ்த்திடும் மாய மானோ காதல்,
முரண்பாடுகளின் மொத்த உருவமே காதல்தானோ?

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# அந்த கதவிற்குப் பின்னால்



நெடு நாளாகவே
மொட்டொன்று மலர்ந்திருக்கு
மொட்டவிழ்க்க
மணாளனைத் தேடியே வாடுது

தேகம் உரசும் தென்றலும் சுடுகிறது
வஞ்சியவள் நெஞ்சமோ
நித்தமும் நோகுது

திருவாய் மலராத
ஊமையான அவளை
நேசித்தவனையும்
சாதியெனும் மடமையால் மறந்திட்டு

பெற்றோருக்கும் உறவுகளுக்கும்
மெய்க்காதலை மறந்து
பசுமையான மனமும்
பட்டுப்போய் கிடக்கிறது

பருவம் தேய்ந்து
முதுமையும் கூடியே
கண்ணுறங்க வழியில்லாமல்
முப்பொழுதும் நினைவோடு

நீண்டுச் செல்கிறது
ஒவ்வொரு நொடியும்
விடியாத வாழ்க்கை
விடைபெற துடிக்குது

நில்லாமல் ஓடும் இரத்த நாளங்கள்
நிசப்தம் ஆகிட
நேரமும் நெருங்குகிறது

சாவிலிருந்து வெல்லுங்கள்
சாதி(தீ)யை கொல்லுங்கள்

மனக்கதவை திறங்கள்
மங்களம் ஒலிக்கட்டும்

கவிஞர் லா.பெனிஸ்,நெல்லை திசைன்விளை

# வயலெல்லாம் வீடாய்

மண்ணு வாசம் வந்த வயலெல்லாம்
மலடாய் போய்கிடக்க
மீதமிருந்த வயலெல்லாம்
மாடி வீடாய் முளைத்திருக்க
பொழிந்த மழையெல்லாம்
போய் ஒதுங்க இடமின்றி
நின்ற இடத்திலே நின்று
நன்னீரும் கழிவு நீராய் மாறியிருக்க
நாலு பேரு இருந்த வீடு
எட்டாய் ஆகிருக்க
எட்டி அடி வைக்க
இடமே இல்லாமல் போக
வயலெல்லாம் வீடாகி உயிர்
வாழ உணவு செய்த
உழவன் அற்று போன
தேசமாகி போகின்றோம்
ஆதலால்
நாசமாகி போய்கின்றோம்



கவிஞர் சுபாலா,வட்டத்தூர்

# நாடு காக்கும் எல்லைச்சாமிகள்

விழி விழித்து தூக்கமின்றி எல்லையில் இவனடா
விழுந்திடாமல் நாட்டுக் கொடியை ஏந்தியவனிவனடா
வியக்கும் இவன் கடமை செயலடா
விளக்காய் நாட்டுக்கு ஒளி கொடுப்பானடா

ஆசை கொண்ட மனதை அடக்கிடுவானடா
ஆயிரம் ஆயிரம் மக்களின் காவலனடா
ஆண்டுக்கு ஒருமுறை விடுமுறையினுக்கே
ஆருயிர் குடும்பத்தை நாட்டுக்காக துறந்திடுவானடா

இரவு பகல் இவன் சேவையடா
இயந்திரமாய் நாட்டுக்காய் உழைத்து கொட்டிடுவானடா
இதயத்தில் நாட்டுப் பற்றை கொண்டவனடா
இன்னல்களுடன் போர் தொடுத்து எதிர்ப்பானடா



சாவுக்கான பத்திரத்தை தானே எழுதிடுவானடா
சாகாமல் மக்களை காக்க கேடயமாவானடா
சாந்தி நிகழ இரத்தத்தை ஓடவிடுவானடா
சாரல் தூவி நிம்மதியை கொடுப்பானடா

எழுச்சி கொண்ட வீரன் இவனடா
மக்கள் நிம்மதியாக உறங்கி மகிழ்ச்சியாயிருக்கவே
தனது ஆசா பாசங்களை மறந்தவனடா
உணர்வுகளுடன் கனவுகளையும் கல்லாய் மாற்றியே
கதிகலங்கும் யுத்தத்தில் சாதாரனமாய் குதிப்பானடா


சுயநலம் அற்று பொதுநலம் கொண்டவனடா
சுதந்திரமாய் மக்களை வாழ வைப்பவனடா
வீரனே நாம் வரம் பெற்றோம் உம்மை பெறவே

கவிஞர் ஜஸூரா ஜலீல்,மலேசியா

# மீண்டும் வா பாரதி

அரசியல் பிழைத்தோர்க்கு கூற்றென்னும் அறமாய்
ஆணவம் தழைத்தோரை இடித்துரைக்கும் விதமாய்
ஈனச் செயல்களினை என்றென்றும் எடுத்தெறிய
மீண்டும் வா பாரதி! மீண்டும் வா!

ஆதரிக்கும் உரிமையினை அமைதியாக விற்றுவிட்டு
அனலிடையின் புழுக்களாய் அன்றாடம் பாடுபடும்
அப்பாவி மனிதர்களை உணர்வூட்டி துயிலெழுப்ப
மீண்டும் வா பாரதி! மீண்டும் வா!



சாதிமத பூசல்களைச் சர்க்கரையாய் பேசிவிட்டு
சனத்திடையே வேற்றுமையை விளையாட்டாய் வீசிவிட்டு
அநியாயம் புரிவோரை அடியோடு வேரறுக்க
மீண்டும் வா பாரதி! மீண்டும் வா!

முகநூலில் அகம்புதைத்து புலனத்தில் சலனமடைந்து
சூதாட்டச் செயலிகளில் சிக்குண்ட தலைமுறையை
சிறைமீட்டு சீர்படுத்த புதுமைபூதத்தை பூண்டோடொழிக்க
மீண்டும் வா பாரதி! மீண்டும் வா!

கனவினிலே நீபடைத்த புதியதொரு பாரதத்தை
நனவினிலே உருவாக்க நீடுதுயில் நீயெழுந்து
எங்கெங்கும் ஏற்றமதை எப்போதும் ஏற்படுத்த
மீண்டும் வா பாரதி! மீண்டும் வா!

கவிஞர் ந.க.மணி,கிளியனூர்,திருவாரூர்

# புத்தாண்டே வருக!

முதுமையில் இளமை கொண்டு
மகிழ்வில் எண்ணம் கொண்டு
உதவும் நிலை கொண்டு
உழைப்பில் உயர்வு கொண்டு
வாழ்வில் உயர புத்தாண்டு
வருக வருகவே!




கவிஞர் பொ.சுப்புலட்சுமி,தேவகோட்டை

# தமிழைக் கொல்லாதே

அடுத்தவன் மொழியை - ஆகச்சிறந்த
மொழியென நம்பிக்கிடக்காதே
தரம்குறைந்த தமிழ்வழக்கால் - தமிழா
தானே "தமிழைக்கொல்லாதே"

ஆரியப்பார்ப்பனன் ஆங்கிலனுக்கு-தமிழா
கற்பை பாய்விரித்தாய்
மோகத்தில் கிடக்கையில் அவன்
மொத்தமும் சுருட்டிக்கொண்டான்

ஆங்கிலமே அறிவுயென்ற
உளவியல்நோயை குணப்படுத்து
ஆடுமாடு மேய்ப்பது அசிங்கமில்லை
அரசாங்க பணியென அமல்படுத்து

தமிழ்பேசவே கூசும்நாவை
சுலுக்கெடுத்து சரிபடுத்து
தமிழ் பள்ளிக்கூடம் கட்டிவைத்து
தமிழ் பிள்ளைகளை நெறிப்படுத்து

சிங்கமொழி சின்னநாடில்
பலமொழி ஆட்சியிலிருந்து
பெயரில் மட்டும்தான் தமிழ்நாடு
பெருமையோடு ஆட்சியிலிருக்கு

அரசியலெல்லாம் தமிழ்குடும்பத்திற்கு - அயலான்
ஆகாதென்று சொல்கிறான்
அதைநம்பி ஆதிதமிழன் - ஏனோ
ஆட்சியேற்க பயக்கிறான்




வடக்கனுக்கு தமிழ்நாடென்ன
வாழக்கொடுத்த சத்திரமா - இல்லையாம்
போதையில் எழுதிக்கொடுத்த
பட்டய பத்திரமா

தொலைக்காட்சியில் துளிக்காட்சியாவது
இலக்கிய வரலாறை ஒளியிடுங்கள்
நல்லபாலியல் கல்விக்கு
இலைமறைக்காயாக வழிவிடுங்கள்

பிறப்புரிமையை பிடிவாதமாய்
பிறந்தநாட்டில் வாக்களிப்போம்
இனியாவது இனப்படுகொலையை
சகமனிதனின் சாவாய் பார்ப்போம்

மொழிப்போரில்
இன்னுயிர் ஈந்த தியாகிளுக்கு
தாய்ப்பாலோடு தமிழ்ப்பாலை
ஊட்டச்சொல்லி நினைவுசெய்

கவிஞர் செந்தமிழ்சுபபாரதி,மதுரை

# திருநாவுக்கரசு

(பாகம் இரண்டு)

அமைதி அடைந்தானா மகேந்திர வர்மன், இல்லை
"உம்மை மதிக்காத சேனரை, யானை மிதித்துக் கொல்"
கீழ்மையான மன்னனும் "அப்படியே" ஆணையிட்டான்
மதயானை அடியார் நோக்கி வெறிகொண்டு ஓடியது

ஆனை தம் மேல் வரக் கண்டு பயந்து நடுங்காமல்
"அஞ்சுவது இல்லை", என்று அருந்தமிழ் பதிகம் பாடினார்
நெஞ்சு பிளக்க வந்த களிறு அவரை வணங்கி நின்றது
வஞ்சகரின் களிறு திரும்பி அவரையே மிதித்துக் கொன்றது

மன்னன் உணர்ந்தான் செய்த தீமைகளுக்கு வருந்தினான்
தன்னம்பிக்கையோடு போராடிய அடியாரை வணங்கினான்
எண்ணமெல்லாம் சிவனை நினைந்து சைவராக மாறினான்
நன்னீர் திருவதிகை குணபரஈஸ்வரம் ஆலயம் கட்டினான்

திருநாவுக்கரசர் திருத்தலங்கள் சென்று பதிகம் பாடினார்
திருப்பொன்னம்பலத்தில் ஆடும் நடராஜரை வாங்கினார்
திருத்தில்லையில் "அன்னம் பாலிக்கும்" பதிகம் பாடினார்
திருஞானசம்பந்தரின் அருள்பெற சீர்காழி அணைந்தார்

வெஞ்சூலையால் சிவன் அருள்பெற்ற நாவுக்கரசர் வருகை
கொஞ்சமும் தாமதம் இன்றி அவர் முன் ஓடி வந்தார் சம்பந்தர்
நெஞ்சம் மகிழ இவரும் அவரும் உள்ளம் நெகிழ வணங்கினர்
நெடுஞ்சாண்கிடையாக இருவரும் விழுந்து வணங்கினர்



இருவரும் தொழுது கசிந்துருகி கண்ணீர் மல்கினர்
ஒருவருக்கொருவர் அன்பு மிக ஆரத் தழுவினர்
திருஞானசம்பந்தர் அவர் கரம் பிடித்து "அப்பரே"
திருவாய் மலர, "அடியேன்", என்றார் அப்பர் பெருமான்

இரு பெருமக்களும் சேர்ந்திருந்த காட்சி கண்டனர்
அரும்பெரும் நிகழ்வல்லவா, பக்தர்கள் ஆராவாரம்
திருவடிகளை தொழுது நிற்க, வானத்து தேவர்கள்
அருள் மழை பொழிய மங்கள வாத்தியங்கள் முழங்கின

"உங்கள் தம்பிரானாரை நீர் பாடும். அப்பரே" என மொழிய
"தங்கள் சித்தம்", மனம் கசிழ்ந்து சிரம் தாழ்த்தினார்
சிங்கார குரலில் "பாற்கொண்டு மூடி" பதிகம் பாடினார்
மங்காத அன்பில் ஒருவரோடு ஒருவர் சிநேகமாகினர்

அரசரும் பிள்ளையாரும் மனம் களித்திருக்கும் காலை
இரண்டு பேரும் சோழ நாட்டில் உள்ள திருத்தலங்கள்
வரமாக இணைந்து வழிபட்டு வர சேர்ந்து சென்றார்கள்
சரமாரியாக பதிகங்கள் கோவில் தோறும் பாடி வந்தனர்

தோணியாக கல்லில் மிதந்தவரும், ஞானப் பால் குடித்தவரும்
காணியான திருக்கோலக்கா தரிசனம் முடிந்து பிரிந்தனர்
ஞானியான பிள்ளையும், அரசரும் பிரியா விடை பெற்றனர் .
நனிப்பள்ளி, நின்றியூர். நீடூர், புங்கூர் தலங்கள் வந்தார் அப்பர் .

(தொடரும்)

கவிஞர் ந.திருக்காமு

# புலர்வாய் புத்தாண்டே

புலர்வாய் புத்தாண்டே
மலர்வாய் மனங்களிலே

அகிலத்தில் புலரும்
ஆண்டுப் புது மலரே
இனிதாய் நாட்கள் ஒளிர
ஈகை பொழிந்தான் இறைவன்
உழைப்பால் வாழ்வு மிளிர
ஊக்கத்தால் வெற்றி வளர
எண்ணத்தால் நல்மனம் குளிர
ஏக்கங்கள் தீர ஏணியால் நீ உயர
ஐம்புலனும் சக்தி பெற்று
ஒழுக்கத்தினால் மேன்மையுற
ஓடம்போல் பயணிப்போம்
ஔவை பாடலை படித்திடுவோம்
(ஃ )ஆயுதத்தை வீசிவிட்டு
அமைதியை நிலைநாட்டிடுவோம்




கவிஞர் ஞா.போனிபாஸ்,கடலூர்

# கின்னகத்தின் எண்ணத்திலே

கின்னகத்தின் எண்ணத்திலே
வண்ணவண்ண கற்பனைகள்

நெல்விளையும் சோலையிலே
புற்களை பறித்துவந்து
தென்னமர ஓலையிலே
தொங்குகிற மாளிகையாய்
கூடுஒன்று கட்டியது!

கண்கவரும் கூட்டினிலே
களிமண்ணை சேர்த்து
மின்மினியை கொண்டுவந்து
மின்விளக்காய் ஒட்டியது!

இன்னும் நான்
வியக்கும்படி
இணையொன்று இறந்தவுடன்
தானும் இறந்ததுவே
பெண் குருவி!



கவிஞர் விக்னேஷ் கலியமூர்த்தி,தஞ்சை

# புத்தாண்டு புது மலரே வருகவே

பழையன கழிதலும், புதியன புகுதலும்
காலம் காலமாக கடந்து வரும் தொடருதலே!
பிறப்பும், இறப்பும் நம் கையில் இல்லையே!
வள்ளுவ பெருந்தகையின் பொன் வரிகளில்
தோன்றிற் புகழோடு தோன்றுக.
பிறந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்றில்லாமல்
நாம் பிறந்த இம்மண்ணுக்கு நம்மால் முடிந்த நன்செயல்கள்
பல அல்லாவிட்டாலும், சிலவற்றை செய்வோமே!
தமிழர் ஆண்டாம் சுபகிருது ஆண்டில் பிறக்கும்
இந்த ஆங்கில புத்தாண்டில் ஒவ்வொருவரும்
ஒரு சபதம் மேற்கொண்டு அதை
இந்த ஆண்டு முழுவதும், அல்ல வாழ்நாள்
முழுவதும் கடைப்பிடித்தோமானால்
நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மைகள் பல பயக்குமே!
நாம் எதை நோக்கி போய்கொண்டிருக்கும்
இருபத்தியோராம் நூற்றாண்டில்
நாம் என்ன செய்ய போகிறோம்.
ஆரோக்கியம், ஒவ்வொருவரும் நல்ல தரமான
உணவு மூலமும், ஒழுங்கான உடற்பயிற்சியும்
தர்ம சிந்தனையும், அடுத்தவர்களுக்கு உதவும்
மனப்பான்மையும், முக்கியமாக நல்லது
செய்யாவிடினும், அல்லது செய்யாமல் இருப்பதும்
நாம் செய்யும் புத்தாண்டின் தர்மங்களே!
ஆன்றோர்களும், சான்றோர்களும் நமக்கு விட்டுச்சென்ற
பல அரிய பொக்கிஷங்கள் கணக்கில் அடங்காது.
நாம் முன்னேறிக் கொண்டே இருக்கிறோம்.
சற்று பின்னோக்கி திரும்பி பார்த்து
செயல்பட்டோமானால் மேலும், மேலும் உயருவோமாக!
இந்திய மக்களுக்கும், நம் தமிழ் நாட்டின் அனைத்து
சகோதர, சகோதரிகளுக்கும்
நம் அகர,முதல பேரவை மூலம் உள்ள உறுப்பினர்களுக்கும்,
இனிய தமிழ் பேரவைக்கும் வருங்காலம் வசந்தகாலமாக மாற
இப்புத்தாண்டில் நல் வாழ்த்துக்களுடன்





கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# கைபேசியில் கடவுள்

பேசுவாயா நீ!?

பெயர்ப் பட்டியல் நகர்த்தி
கருவிழி நகராது
காத்திருக்கும் காலம்

பேசத்தான் ஆசை.
பேசாமல் நகர்கிறது
கடந்த கால நினைவுகள்
கண்மூடி



காற்று வரும் திசை தடுத்து
சீரான காற்றை சிறைப்படுத்தி
தானும் உடன்பட்டு
தடைக் கரங்களாகும்
திரைச்சீலை

நெஞ்சின் கடிகாரமுள் எனக்கு
மட்டும் ஏதோ சொல்ல தவிக்கிறது
மை தீர்ந்த பின்னும் வரைந்தவரி
மிச்சம் இன்னுமிருக்கு என.

வரி வரையாத
வாழ்வியலின் மிச்சம்
காத்திருக்க சொல்லியது!

கவிஞர் ஜெயப்பிரபா

# பேசும் காவியம்

எங்கு வீழ்ந்தாலும்
ஏந்திக்கொள்வேனென உன்
பார்வை மொழிக்கூற்றில்

எங்கும் தொலையாது
உன்னில் முழ்கும் என்னிதயம்
பேசும் மொழிக்கூற்றும்

புரியாத புதிரே
யாரோ யாரோ
யாவுமாகி யாதுமாகி
நீயும் நானும் நாமாகி
பின்னிப் பிணைந்த மனங்கள்
பிணங்குவதேது

தொடர்கவிதைக்குள்
தொற்றிடும் உள்ளம்
தொடாத அலைகளை
அள்ளிடும் பரபரப்பில்

திகட்டாத அன்பில்
அதிக காதல் கலக்கி
சுதந்திரம் பறிக்காத
சுத்தமான காற்றை சுவாசிக்க
ஒற்றை விழிமுத்தத்தில்
நிறையும் நிம்மதி

பெரிதாய் பேச்சுகள் கொள்ளாது
ஆழ்ந்த பார்வையில்
அடங்காத காதல் திமிர்
கொத்திப் போகும் மனதை



மறுகரை தேடித் திரியாத
வாசம் வீசும் சோலையில்
ஆடும் மலர்கள்
பேசும் காவியம் போல்
பெரிதாய் வாழும்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# வையத் தலைமை கொள்

பாதுகை களைந்த
பாதப் பயணமே
பூமி முட்டிய
விதையின்
போர்க்கதை அறியும்

குறைத்து மதிப்பிடா
அம்புகளின் வேகமே
கண்ணுக் கெட்டிய
இலக்குகளின்
கண்ணியம் அறியும்

வெட்டும் கோடரியின்
ஆழக்கூர்மையே
வீழ்த்தினாலும்
விதையாகும்
பக்குவம் அறியும்

பாலை வெயிலின்
பசி நாக்குகளே
தாகங்கள் தீர்க்கும்
தியாகம் அறியும்

தோல்வித் தேடலின்
நீர் வேட்கையே
வெற்றிக் கிளையின்
வேர்கள் அறியும்



வடுக்கள் வார்த்த
வலியின் நினைவே
ஓடிய வியர்வையின்
நேர்மை அறியும்

மலையடிவார நிழலில்
உயரத்திற்கான ஓய்வு
தொடரோட்டத்திற்கு உதவாது

இலக்கின் முடிவே
அடையாளத்தின்
குடியுரிமை
தகுதி கொள்
வையத் தலைமை கொள்!

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# பனைமரம்

உலகங்கள் கீழேழும் மேலேழும் ஈரேழாம்!
நம்வாழ்வு மேலமைந்த மண்ணுலகாம்! விண்ணுலகில்
தேவருலகு ஒன்றென்க! அங்குளதாம் கற்பகப்பேர்
விருட்சமென்பர்! நாம்நினைத்த தெல்லாமும் ஈவததாம்!
மண்ணுலகின் கல்பதரு என்றிடுவர் நீள்பனையை!
அம்மரத்தின் ஆணினத்தை "அழகுபனை" என்றிடுவர்!
கார்த்திகையில் சுற்றிமகிழ் "மாவலி’"க்கு அதன்காயே
பயன்படுமே! பெண்பனைக்கு "பருவப்பனை’ என்போமே!
பனைதனிலே எண்ணான்கு வகைகளுள! தமிழ்மாநில
மரமாக குறிப்போமே! ஞாலத்தில் நூறளவு
நாடுகளில் காண்போமே! ஐபத்து ஆண்டுகளின்
முன்னிருந்தது ஆறைந்து கோடிமரம் தமிழகத்தே!
புல்லினம்சார் தாவரத்தின் பேரினத்தைச் சார்ந்ததுவே!
வைத்தபின்னர் பத்தாண்டு பின்னர்தான் வளர்ச்சியதும்
பயனுமாகும்! காணுயரம் மீட்டரிலே மூவைந்து
முதலாக ஆறைந்தும் கொண்டிடுமே! பதநீரில்
கருப்பட்டி சீனி வெல்லம் கற்கண்டு மிட்டாயும்
கூழதுவும் நுங்குமுதல் கிழங்குவரை பற்பலவும்
உண்பொருளே! ஆரோக்யம் மிக்கவையே! இஃதன்றிதும்
பென்றும் தூரிகையாய் பயன்படு பல்கழிவுகளும்
மரமதுவே வீடுகட்ட கூரைவேய ஓலையது
மேல்சொருக விசிறியாய் விளையாட்டு பொருளாக
அலங்கரிக்க என்றெல்லாம் பற்பலவாம் பயனாமே!
"சொக்கப்பனை" ஜோதியுரு கண்டிடவும் கூடுவதே!
பனையொன்று ஆண்டளவில் நூற்றைம்பது கிலோபதநீர்
தும்பினிலே ஓர்கிலோவும் ஈர்க்கதுவோ ஒன்றரைகாண்
கிலோதானும் நார்முடிகள் ஈரெட்டும் ஓலைகாண்
எட்டின்மேல் வெல்லமதும் ஐயைந்து கிலோஅளவு!
இருகூடை இருதூரிகை ஆறுபாய்கள் மழைக்குடையும்
என்றமைந்த பற்பலவும் ஈந்துதவும் பனைவாழி!



கவிஞர் கனைக்காயன் (இ.சே.இராமன்)

# நல்ல நூல்

அறிவு சார்ந்த பாதையை
வழியாக்கிக் கொண்டு
நல்லதோர் ஊன்றுகோலால்
நடந்து சென்று
உலகத்தின் நன்மை தீமைகளை
ஒவ்வொரு நாளும் கடந்து
மற்றவர்களுக்கும் அதை எளியமுறையில் பகிர்ந்து
வாழ்க்கைப் பயணத்தில் நம்மையும்
நம் சுற்றத்தாரையும் நல்வழிப்படுத்துவதே
நல்ல நூலினை படிப்பதனால் ஏற்படும்
நமக்கான வழிகாட்டுதலாலே.



கவிஞர் ம.இராஜசேகர், ஆக்கூர் மடப்புரம்

# சென்ரியுக்கள்

முதியோர் இல்லம்
இளமை மாறாமல் நீடித்திருக்கிறது
புரிதலின் நேசம்

கடல் பயணம்
கரை ஏறுகையில் பாடமாய்
வாழ்க்கையில் அமைதி

ஓவியக் கண்காட்சி
உயிரோடு கண் முன்னே
வரலாற்றின் சாட்சிகள்

சாய்வு நாற்காலி
சாயாமல் என்றும் நிமிர்ந்துள்ளது
தாத்தாவின் வாழ்க்கை

ஏர் கலப்பை
உழுத வரை பிழைத்திருந்தது
விவசாய நிலங்கள்

புத்தக வெளியீடு
எழுதும் ஆசையை விரிவாக்கும்
வாசகர் விமர்சனம்

வானில் பட்டம்
தரையில் பறந்து களிக்கிறது
குழந்தையின் கைகள்

தாய் வீடு
ஒருநாள் தற்காலிக விடுதலை
சமையலறைச் சிறை




வெளிநாட்டுப் பயணம்
அவ்வளவு தூரம் இனிக்கவில்லை
உடைகளையும் சோதனை

பெரும் வியாபாரி
பேரம் பேசி ஜெயிக்கிறார்
கீரை விற்பவரிடம்

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# வயல் வெளியில் வான் மதியே!

சோறு கொண்டு
வந்துபுள்ள செண்பகமே
சேதி என்ன சொல்லப் போற
மாமனக் கண்டாக்க
கன்னக்குழி செவக்கிது
பூமனம் மாறாம மல்லிப்பூ
வாசம்வீசுது

மெல்லிடை இடுப்பால
வெடுக்கினுதான் வெட்டுற
பின்னழகுக் கூந்தலில
சாரப்பாம்பு சடையாட்டுற
கொக்கி இழுக்குதடி
கொடிபோல சுத்துதடி
தாக்கி விழுந்துபுட்டேன்
தவிப்போட தானிருக்கேன்



வயல்காத்து வீசயில
மனசெல்லாம் குளிருமடி
ஒனப்பாக்க நானுந்தான்
ஓயாமக் காத்திருக்கேன்
எப்பத்தான் சொல்லப்போற
எண்ணத்தில் உள்ளத
அப்பத்தான் ஏமனசு
ஆனந்தம் ஆடுமடி

பிறைநெத்திப் பொட்டும்
பித்தனாக்குதடி என்ன
முறையேதும் பாத்துத்தான்
நாள்பாக்க வாரேன்
சீரெல்லாம் வேணாம்
ஏஞ்சிங்காரி போதுமடி
காசுபணம் தேவையில்லை
கட்டிக்கடி மாமானத்தான்

நெனப்புல வாழுறேன்
நெசமாலும் கண்ணே
அணைச்சிக்க வேணும்
அருகில வாபுள்ள
ஆசையெல்லாம் சொல்லிப்புட்டேன்
ஆறுதலும் சொல்லுபுள்ள
மீசைய முறுக்கிக்கிட்டு
மிடுக்காக நடக்கத்தான்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# புத்தாண்டே வருக!

நாட்கள், வாரங்கள், மாதங்கள் உருண்டோடி
நடப்பு ஆண்டு  நிறைவுபெறும் தருணமிது!
அடுத்து வரும் புத்தாண்டை வரவேற்று
விடுத்திடுவோம் வாழ்த்துகளை! திட்டமிடல் தொடங்கிடுமே!
பட்டியல் நீண்டிருக்கும் பலசெயல்கள் முடிப்பதற்கு!
முடிக்க நினைத்தவற்றை முடித்தோமா கடந்தாண்டில்?
விடையறியாக் கேள்விபல விளைந்திடுமே நம்முள்ளே!
தடைகள், தாமதங்கள் தடுத்திருக்கும் பலவற்றை!
கடந்த ஆண்டின் நாட்டு நடப்புகளை
படங்களுடன் தொகுத்தளிக்கும் நாளேடுகள் பலவும்!
தடம் பதித்தோர் விவரங்கள் தவறாமல் இடம்பிடிக்கும்!
இடம்பிடிக்க பலருள்ளும் ஏக்கம் நிறைந்திருக்கும்!
நற்குடிமகனாக நாமிருக்க விழைந்திடுவோம்! நாடுயரும்!
பற்பல துறைகளிலும் கையூட்டு, ஊழல்கள்
இற்றைக்கும் தொடர்ந்திடுதல் ஏனென்று சிந்திப்போம்!
பெருந்தொற்றின் தாக்கம் இல்லாத நிலையடைய
அரசாங்க  ஆணைகளை  அனைவரும் கடைபிடிப்போம்!
ஊறு விளைத்து உயிர்குடிக்கும் போதைக்கு
சிறுவர்களும் அடிமைகளாய் சீரழிதல் நன்றாமோ?
வருங்காலத் தலைமுறைகள் வளமாக வாழும்வகை
சிறுவர்களின் மனங்களிலே நல்லொழுக்கம் விதைத்திடுவோம்!
சுற்றுச்சூழல் காக்க நெகிழியைத் தவிர்த்திடுவோம்!
பாரெங்கும் போரின்றி நல்லமைதி தவழட்டும்!
ஏர்பிடிப்போர் தம்வாழ்வில் ஏற்றங்கள் பெருகட்டும்!
வறுமை நிலையின்றி வளங்கள் பெருகட்டும்!
வன்முறைகள் அகன்று வஞ்சமிலா நெஞ்சமொடு
மனிதர்கள் வாழட்டும்!  மானுடம் தழைக்கட்டும்!
அனைவரின் மனத்துள்ளும் அன்பு குடிகொள்ள
இனிவரும் நாட்களெலாம் இன்பநிலை தொடரட்டும்!
அனைவருக்கும் பகிர்கின்றேன் புத்தாண்டு நல்வாழ்த்தை!

2023
புத்தாண்டு வாழ்த்துக்கள்

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# ஔவை சு. துரைசாமி

(கட்டுரை)



ஔவை சு. துரைசாமி (5 செப்டம்பர் 1902 - 3 ஏப்ரல் 1981) ஒரு தமிழ்நாட்டுத் தமிழறிஞர் மற்றும் கல்வியாளர் ஆவார். நற்றிணை, சிலப்பதிகாரம், திருவருட்பா உள்ளிட்ட பல பனுவல்களுக்கு உரை எழுதியமையால் 'உரைவேந்தர்' என அழைக்கப்பெற்றார். கலைமாமணி விருது உள்ளிட்ட சிறப்புகளைப் பெற்றுள்ளார். தமிழறிஞர் ஔவை நடராசன் இவர் மகன்களுள் ஒருவராவார். மேலும் தமிழ்நாட்டு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் தற்போதைய இயக்குநர் ந. அருள் இவர் பேரன் ஆவார்.

## தொடக்க வாழ்க்கை

தற்போதைய விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள அவ்வையார்குப்பம் என்னும் சிற்றூரில், சுந்தரம் பிள்ளை - சந்திரமதி தம்பதிக்கு மகனாக 5 செப்டம்பர் 1902 அன்று பிறந்தார்.

## கல்வி

உள்ளூரில் தொடக்கக் கல்வி பயின்றபின் திண்டிவனத்திலிருந்த அமெரிக்க ஆர்க்காடு நற்பணி உயர்நிலைப் பள்ளியில், பள்ளியிறுதி வகுப்புவரை பயின்றார். பின்பு, வேலூர் ஊரிசு கல்லூரியில் இடைநிலை வகுப்பு பயின்றார். எனினும் வறுமைக்கு ஆட்பட்ட தன் குடும்பத்திற்கு உதவும் நோக்கில் உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளர் பணியில் சேர்ந்தார். பின்னர் அப்பணியில் தொடர மனம் இல்லாமலும் தமிழ் மொழி மேலிருந்த பற்றுதலாலும் ஆறு மாதத்தில் அப்பணியிலிருந்து விலகினார்.

# ஔவை சு. துரைசாமி

(கட்டுரை)

## ஆசிரியப்பணி

தன் 22-ஆம் அகவையில் தஞ்சாவூர் சென்ற துரைசாமி, கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளியில், தமிழவேள் த. வே. உமாமகேசுவரனால் ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டார். அப்பணியில் இருந்துகொண்டே, தமிழ்ப்பாடம் பயின்றார். 1928-இல் கரந்தையிலிருந்து வெளியேறினார். 1930-இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் "வித்துவான்" தேர்வில் வெற்றி பெற்றார்.

## தமிழ்ப் பணி

தற்போதைய இராணிப்பேட்டை மாவட்டம் கலவை தொடக்கப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

1929 முதல் 1941 வரை காவேரிப்பாக்கம், செய்யாறு, செங்கம், போளூர் ஆகிய இடங்களில் உயர்நிலைப்பள்ளித் தமிழாரியராகப் பணிபுரிந்தார்.

தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் முதலிய இதழ்களில் தமிழ் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார்.

1942 இல் திருப்பதி திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியில் ஆராய்ச்சியாளராகப் பணியில் சேர்ந்தார்.

1943 முதல் எட்டு ஆண்டுகளுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில், விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1951 இல் மதுரை தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்தார்.

# ஔவை சு. துரைசாமி

(கட்டுரை)

## தமிழ்ப் பணி

மணிமேகலை காப்பியத்திற்குப் புத்துரை எழுதும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் எதிர்பாராமல் இயற்கை எய்தியதை அடுத்து, "கரந்தை கவியரசு" அ. வேங்கடாசலத்தின் விருப்பத்திற்கிணங்க, அக் காப்பியத்தின் இறுதி நான்கு காதைகளுக்கும் விளக்கவுரை எழுதிக் கொடுத்தார் துரைசாமி. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் போது, சைவ சமய இலக்கிய வரலாறு, ஞானாமிர்தம் போன்ற அரிய நூல்களை எழுதினார். அந்நூல்கள் பல்கலைக்கழக வெளியீடுகளாக வெளியிடப்பட்டன.

## சிறப்புகள்

1964 ஆம் ஆண்டு மதுரை திருவள்ளுவர் கழகம் "பல்துறை முற்றிய புலவர்" என்ற பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்துச் சிறப்பித்தது.

இராதா தியாகராசனார் தம் ஆசிரியப் பெருந்தகையின் உயர் பண்புகளைப் பாராட்டி "உரைவேந்தர்" எனும் பட்டம் வழங்கி தங்கப் பதக்கம் அளித்தார்.


1980 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி "தமிழ்ப் பேரவைச் செம்மல்" எனும் பட்டம் வழங்கி சிறப்பித்தார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், "தமிழ்த் தொண்டு செய்த பெரியார்" எனும் பட்டமும், கேடயமும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

# ஔவை சு. துரைசாமி

(கட்டுரை)

## படைப்புகள்











1. திருமாற்பேற்றுத் திருப்பதிகவுரை
2. நற்றிணை உரை
3. சிலப்பதிகாரம் சுருக்கம்
4. யசோதரகாவியம் - மூலமும் உரையும்
5. நந்தா விளக்கு
6. ஔவைத் தமிழ்
7. தமிழ்த்தாமரை
8. வரலாற்றுக் காட்சிகள்
9. சிவஞானபோதச் செம்பொருள்
10. செம்மொழிப் புதையல்
11. தெய்வப்புலவர் திருவள்ளுவர்
12. Introduction to the story of Thiruvalluvar
13. ஆர்க்காடு
14. திருவோத்தூர் தேவாரத் திருப்பதிக உரை
15. எட்டுத்தொகையுள் ஒன்றாகிய ஐங்குறுநூறு உரை
16. சிவபுராணம்
17. சீவகசிந்தாமணி சுருக்கம்
18. முப்பெருங் காவியங்களில் ஒன்றான சிலப்பதிகார ஆராய்ச்சி
19. முப்பெருங் காவியங்களில் ஒன்றான மணிமேகலை ஆராய்ச்சி
20. ஞானாமிர்த மூலமும் பழைய உரையும்
21. மணிமேகலைச் சுருக்கம்
22. முப்பெருங் காவியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணி ஆராய்ச்சி
23. ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை
24. புறநானூறு உரை (பகுதி 1)
25. மதுரைக்குமரனார்[1]
26. மதுரைக்குமரனார் (மறு வெளியீடு)
27. தமிழ் நாவலர் சரிதை - மூலமும் உரையும்
28. புறநானூறு உரை (பகுதி 2)
29. பதிற்றுப் பத்து உரை

# ஔவை சு. துரைசாமி

(கட்டுரை)

## தனி வாழ்க்கை

தற்போதைய திருவண்ணாமலை மாவட்டம் கோட்டுபாக்கத்தைச் சேர்ந்த இலட்சுமி -அண்ணாபிள்ளை இணையரின் முதல் மகளான உலோகாம்பாள் என்பாரை மணந்ததார் துரைசாமி. இவர்களுக்கு ஔவை நடராசன், மருத்துவர் மெய்கண்டான் உள்ளிட்ட 11 பிள்ளைகள் பிறந்தனர். நடராசன் வழியில் துரைசாமிக்கு ந. அருள் என்ற பேரன் உள்ளார். இவர் தமிழ்நாட்டு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராக இருந்தார்.




## மறைவு

03 ஏப்ரல் 1981 அன்று, மதுரை மாநகரிலிருந்த தன் இல்லத்தில் காலமானார். அவர் உடல் மதுரையிலேயே அடக்கம் செய்யப்பட்டு அவ்விடத்தின்மேல் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது.

## கட்டுரைத்தொகுப்பு



குமர தர்மசீலன், இதழாசிரியர்


அகர முதல
உரக்க சொல்வோம்
அகர முதல
நாளை நமதே
AAGARAMUTHALAA NEWS
அகர முதல செய்திகள்
வெற்றி எனும் இலக்கை அடைவதற்கு
யாரும் நமக்கான பாதையை உருவாக்க
மாட்டார்கள் நாம் தான் அதற்கான
பாதையை செதுக்க வேண்டும்.
/Aagaramuthalaa
/www.aagaramuthalaa.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com